பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 09 திங்கட்கிழமை (24 - 07 - 2000) VALAMPURI ஒலி: 217

## பொ. ஜ. ஐக்கியமுன்னணி-முஸ்லிம்காங்கிரஸ் முரண்பாடு

# எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலில் முஸ்.காங்கிரஸ்தனித்துபோட்டியிடும்

### நேற்றுக் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

(அலுவலக நிருபர்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவுள்ளது.

கட்சித்தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஸ்ரப் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று இரண்டாவது தடவையாக நடைபெற்றபோது கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட ''தனித்துப் போட்டியிடுவதென்ற'' தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முஸ்லிம்

(6ஆம்பக்கம் பார்க்க)

### திருமலைக்கு இன்று பயணிகள் கப்பல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பல் இன்று திங்கட்கிழமை திருமலை நோக்கி புறப்படவுள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை 7.30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு பயண ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (வ-4)

### பல்வேறு மோதல் சம்பவங்களில் 16 படையினர் காயமடைந்தனர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளில், நேற்று இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களின் போது 16 படையினர் காயமடைந்துள்ளதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவிக்கையில்;

(6ஆம்பக்கம் பார்க்க)

### கறுப்பு ஜூலை தினம் அனுஷ்டிப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று கறுப்பு ஜூலை தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் கறுப்பு ஜூலை தினத்தை வெகு விமரிசையாக அனுஷ்டித்தனர்.

நகரப்பகுதி மக்களும் வீடுகளில் இருந்தவண்ணம்

## கூட்டணி முன்வைத்த ஆலோசனையை மாற்றக்கூடாது

### மத்திய குழு தீர்மானம்

[கொழும்பு]

அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகளில்,

★ வடக்குக் கிழக்கு இணைந்த அலகாக இருத்தல்.
★ காணி அதிகாரங்கள் பிராந்தியங்கள் வசம் இருத்தல்.
★ அரசியல் அமைப்பு சமஷ்டியை நோக்கியதாக இருக்கவேண்டும்.

### ரெலோ உறுப்பினர் மூவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

செட்டிக்குளம் வீரபுரத்

தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் கறுப்பு ஜூலை தினத்தை வெகு விமரிசையாக அனுஷ்டித்தனர்.

நகரப்பகுதி மக்களும் வீடுகளில் இருந்தவண்ணம் பிரார்த்தனைகளுடன் கறுப்பு ஜூலை தினத்தை அனுஷ்டித்தமை குறிப்பிடத்தக்கது. [வ-4]

# மத்திய குழு தீர்மானம்

[கொழும்பு]

அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகளில்,

- ★ வடக்குக் கிழக்கு இணைந்த அலகாக இருத்தல்.
- ★ காணி அதிகாரங்கள் பிராந்தியங்கள் வசம் இருத்தல்.
- ★ அரசியல் அமைப்பு சமஷ்டியை நோக்கியதாக இருக்கவேண்டும்.

என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்னைய நிலைப்பாட்டில் இருந்து மாறக்கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (6ம் பக்கம் பார்க்க)

(வவுனியா)

வவுனியாவில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

செட்டிக்குளம் வீரபுரத்தைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரசபை ஊழியர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(வவுனியா)

வவுனியா நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் மேற்கொண்டிருந்த திடீர் வேலை நிறுத்தம் முன்னாள் நகரசபை உபதலைவர் கே. சந்திரகுலசிங்கத்தின் முயற்சியினால் நேற்று கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது:

நகரசபையின் சுகாதாரத் தொழிலாளி சண்முகம் கிருஷ்ணமூர்த்தி வவுனியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டதை அடுத்து இவ் வேலை நிறுத்தம் மேற்கொள்

(6ஆம் பக்கம்பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

வெடிவிபத்து மற்றும் மோதல்சம்பவங்களின் போது உயிரிழந்த தமது உறுப்பினர்களின் பெயர் விபரங்களை புலிகள் அறிவித்துள்ளனர்: அவர்களின் விபரம் வருமாறு

● 2ம் லெப். சிவலிங்கம் சிவகுமார் (மட்டக்களப்பு)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நுண்ணலைத் தொடர்பு சேவை தினமும் 400 இணைப்பு கிடைக்கும்

### மோட்டோ றோலாவும் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கான நுண் அலை தொலைபேசி இணைப்பு பரீட்சார்த்தமாக வெற்றியளித்ததை அடுத்து நேர அட்டவணையின் பிரகாரம் தினமும் 300 முதல் 400 தொலைபேசி பாவனை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### தமிழ்க் கட்சிகள் எவையும்

# மக்களை கைது செய்யமுடியாது வவு. இணைப்பதிகாரி எச்சரிக்கை!

[வவுனியா]

வவுனியாவில் அண்மைக் காலங்களாக இடம்பெற்று வரும் பொதுமக்கள் மீதான தாக்குதல் மற்றும் மோதல் சம்பவங்கள்தொடர்பாகவவுனியா இராணுவ இணைப்பதிகாரி கேணல் அல்விஸ் தமிழ்க் குழுக்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் புளொட், ஈ.பி. ஆர். எல். எவ், ஈ.பி. டி. பி, ரெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்க்குழுக்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய கேணல் அல்விஸ் தமிழ்க்குழுக்கள் பொது மக்களைக் கைசெய்து விசாரணைகளை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

( 6ஆம் பக்கம் பார்க்க)

### கட்டுநாயக்கா விமானத் தளத்தில்

# பயிற்சி விமானம் வீழ்ந்து நொருங்கியது

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பயிற்சி விமானமொன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று பிற்பகல் 1.40 மணியளவில் வீழ்ந்து நொருங்கியது. இந்த விமானத்தின் விமான ஓட்டி பரசூட் மூலம் இறங்கிய போதும் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் (6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### சீமெந்து கூரை ஓடுகள்

லண்டன் Parry நிறுவனத்தால் தரநிர்ணயம் செய்யப்பட்ட சீமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன்பல அளவுப் பிரமாணங்களில் இயந்திரங்களால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் சற்'ளும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையில் நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட சழிவு'ளும் இலவச போக்கு வரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை.
பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

(கி-294)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

சரணவாய் வடக்கு, எள்ளம் குளம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் (நாச்சிமார்) வியாழன் இரவு பெரும் தொகையான பணம் மற்றும் சுவர்மணிக்கூடு திருடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் கடந்த நான்கு ருடத்தில் இத்துடன் மூன்றாவது தடவை திருட்டு நிகழ்ந்துள்ளது. (க-12)

## விண்ணப்பப் படிவங்கள் விநியோகம்

வலி. கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வறிய மக்களுக்காக பத்தாயிரம் ரூபா வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிவறுமைக்குட்பட்டவர்களென கிராம சேவையாளரால் உறுதிப் படுத்தப்பட்டவர்கட்கு இந்நிதி வழங்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் அவர்கள் ஏதாவது வருமானத்தைப் பெறுகின்ற நடவடிக்கையிலீடுபடவேண்டுமெனவும் ஈ.பி.டி.பி. பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-79)

## வருடாந்த உற்சவம்

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த

உயர்தரப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில்

# ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரங்கள் வருமாறு

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்குக. பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலயங்களில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரங்கள் வருமாறு

### வடமராட்சி வலயம்

#### ஆரம்பக்கல்வி

ராஜரட்ணம் கமலாதயன் செம்பியன்பற்று
பொன்னம்பலம் இலட்சியவதனி, உடுத்துறை வடக்கு
ஜோசப் எமில்ராஜன், தாளையடி கிழக்கு
அதிமுத்துலிங்கம் அனுசியா, குடத்தனை
இராஜரட்ணம் ஜோசப் சுதர்சன், மருதங்கேணி தெற்கு
கனகசபை அனுஷியா, புலோலி கிழக்கு
லோகநாதன் ரதிதேவி, பருத்தித்துறை
வசந்தாதேவி இராஜரட்ணம், புலோலி தெற்கு
தில்லையம்பலம் மிதிலா, வராத்துப்பளை
தங்கவடிவேல் தயாளன், அல்வாய் வடக்கு
வீரசிங்கம் ரங்கநாதன், அல்வாய்
கிருஷாந்தி இராமலிங்கம், அல்வாய் கிழக்கு
கணேசன் தர்மதேவன், அல்வாய்
நடேசு ஜெயவாணி' கரவெட்டி வடக்கு
கந்தசாமி பார்த்தீபன், உடுப்பிட்டி

#### கணிதம்

அந்தோனி அனெஸ்ரன் றோஜ், தாளையடி கிழக்கு
ஜோசப் எமில்ராஜன், தாளையடி கிழக்கு
தம்பிப்பிள்ளைகணேஸ்வரன், செம்பியன்பற்று
சங்கரப்பிள்ளை சிவகுமாரி, தாளையடி
கெங்காதரன் துரியோதரன், வெற்றிலைக்கேணி
யோககுந்தரம் பத்மகௌரி, பருத்தித்துறை
பசுபதி விஜயதாஸ், பருத்தித்துறை
சின்னராசா சுபாசினி, பருத்தித்துறை
தேவகி ராமசாமி, புலோலி தெற்கு
ஈஸ்வரநாதன் சுகந்தினி, தம்பசிட்டி
கதிர்காமத்தம்பி நாகநாதன், புலோலி
சுந்தரேஸ்வரன் சுதர்சினி, புலோலி தெற்கு
செந்திவேல் உதயலிங்கம் பருத்தித்துறை
கனகசபாபதி தர்சினி, புலோலி வடக்கு
எஸ். காயத்திரி, அல்வாய் மேற்கு
செல்வாம்பிகை செல்வராசா, புலோலி வடக்கு
இராஜரட்ணம் சமலதாசன், துன்னாலை
றோகினி முருகையா, மொறட்டுவ
கதிரவேலுவாசுகி, கரவெட்டி கிழக்கு
ரட்ணசபாபதி பிரபுசங்கர், கரவெட்டி வடக்கு
மீரா அருளானந்தன், அல்வாய் கிழக்கு
கணபதிப்பிள்ளை இளங்கோ, அல்வாய் கிழக்கு
தாரணி தயாளன், தும்பளை
நாகேந்திரன் உபேந்திரன், கரணவாய் தெற்கு
புஸ்பலிங்கம் கவிதா, கரவெட்டி கிழக்கு
எஸ். பகீரதி- கரவெட்டி
தர்மன் நகுலேந்திரன், கரவெட்டி வடக்கு
லதா சடாட்சரம், கம்பர் மலை
சிவலிங்கம் சிவரஞ்சன், அல்வாய் கிழக்கு
சிவஞானம் மாலதி, கரவெட்டி மேற்கு
சுந்தரமூர்த்தி கிருபாகரன், கரணவாய் வடக்கு
ரஜனி பொன்னம்பலம், கரணவாய் கிழக்கு
அரியகுணராஜா சாருமதி, வதிரி
சிவகலா சிவகுருநாதன், அல்வாய்
சண்முகநாதன் கௌசியா, கரவெட்டி
விஜிதா ராஜேஸ், கரவெட்டி
கிருஷ்ணப்பிள்ளை சஞ்ஜீதா, நெல்லியடி கிழக்கு

#### உடற்கல்வி

சுப்பிரமணியம் சிவகெள்ரி, புலோலி மேற்கு
பாலகிருஷ்ணன் ஜெயகேசவன், அல்வாய் வடக்கு
ஜெகநாதன் வாகீசன், கெருடாவில்
பாலகிருஷ்ணன் தணிகைவேல், அல்வாய் மேற்கு
செல்லத்தம்பி சபேந்திரன், கரணவாய் கிழக்கு
என். பிரகாஷ், கரவெட்டி கிழக்கு
ஞானசேகரம்ஞானதயாளன், துன்னாலை தெற்கு

#### சங்கீதம்

நாகலிங்கம் துஷ்யந்தினி, செம்பியன்பற்று தெற்கு
பாலசுப்பிரமணியம் பாமா அம்பன்
கவிதா தம்பையா, துன்னாலை வடக்கு
கணேசராசா நிஷாந்தி தும்பளை மேற்கு
பாலசுந்தரம் பாக்கியலக்சுமி, புலோலி மேற்கு
கிருஷ்ணபிள்ளை ஜானகி, தொண்டைமானாறு
சுஜாதா தம்பையா, துன்னாலை
கவிதா சந்திரசேகரசர்மா, பருத்தித்துறை
சகிலா துரைராசா, புலோலி கிழக்கு

#### சித்திரம்

யோகதாசன் சுதாகர், பருத்தித்துறை
நடராஜா நந்தினி, பருத்தித்துறை
தர்மலிங்கம் சதீஸ்வரி, வல்வெட்டித்துறை
தர்மபாலகிருஷ்ணன் குருபரன் கம்பளை
விவேகானந்தன் நிரஞ்சன், அல்வாய் கிழக்கு
பவாரட்ணம் கௌசல்யா, வல்வெட்டித்துறை
அம்பிகாநிதி அச்சுதன், திரி
சிங்கன் நேசலிங்கம், இமையாணன் கிழக்கு
தங்கவடிவேல்ஜோதீஸ்வரன், இமையாணன் கிழக்கு

#### நடனம்

பி. ஜானகி, கரவெட்டி மேற்கு
பத்மநாதன் நீரஜா, நெல்லியடி
ராமநாதன் ஞானதர்சினி, கம்பர்மலை
எம். வனிதா, கரவெட்டி
அனந்தராஜா பவானந்தன், அல்வாய் தெற்கு

### தென்மராட்சி வலயம்

#### ஆரம்பக்கல்வி

ராமுப்பிள்ளை அம்பிகை, கைதடி கிழக்கு
ஜெனிற் வதனி ஜேசுதாஸன், சாவகச்சேரி
திருஞானம் நவநீதன், எழுதுமட்டுவாள் தெற்கு
வெள்ளையன் சரவானந்தன், மட்டுவில் தெற்கு
காமம்
நடராஜா தயானி, வவுனியா
வடிவேலுப்பிள்ளை சதீஷ்குமார், தம்பகாமம்

#### ஆங்கிலம்

யோகன்பிள்ளை சுசீந்திரன் அருண்ராஜ், உசன்
சிவராஜசிங்கம் சிவஞானவதனா, சாவகச்சேரி
யசோதை நடராஜசுந்தரம், நுணாவில் மேற்கு
ஜீதாநந்தினி சதாசிவசர்மா, மட்டுவில் வடக்கு
சோமசுந்தரம் அருள்மொழி, மீசாலை மேற்கு
பெரியதம்பி காமினி, சாவகச்சேரி
இராஜதுரை ஞானராஜ், கல்வளை
நிர்மலன்கவிதா, சாவகச்சேரி
ரோகினி அருணாசலம், சங்கத்தானை
துரைரட்ணம் சிவசுதனி, மட்டுவில் தெற்கு
எஸ். சுபத்திராதேவி, பெரியபளை
அபிராமி ஆறுமுகம், வண்ணான்கேணி
பொனிவாஷ் டயானா, முல்லைவாடா
லூத்று ஜெசிந்தா மரியதாஸ், புலோப்பளை
பிறேம் ஜோதி பத்மரூபி, பெரியபளை
ஆர். ராஜ பிறேமிளா, சாவகச்சேரி
சிவரட்ணம் சாந்தினி, மீசாலை மேற்கு
பாஸ்கரலிங்கம் கௌரி, வரணி
வேலுப்பிள்ளை அற்புதமலர் சரசாலை
ரோகினி அருணாசலம், சங்கத்தானை
செல்வராஜா ஜெகநந்தன் மீசாலை,
பி. வாசுதேவன் சாவகச்சேரி,
என். அமிர்தினி சாங்கத்தானை,
கவிதா விநாசித்தம்பி சாவகச்சேரி,
கங்காதரன் திருமகள் சரசாலை,
நிரஞ்சினி கோபாலகிருஷ்ணன் சங்கத்தானை,
கே. தவமலர் மட்டுவில் கிழக்கு,
என். ஆனந்த வடிவேல் மீசாலை வடக்கு,
தர்மலிங்கம் சுமஞ்சுளா சாவகச்சேரி,
அருநந்தி கௌசல்யா சாவகச்சேரி,
சிவகங்கை பொன்னம்பலம்

கோப்பாய் மத்தி முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. ஆவணி மாதம் முதலாம் திகதி காலை புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம், தொடர்ந்து இரதோற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (க-79)

★ ★ ★

வல்லை கப்பலுடைய பிள்ளையாராலய வருடாந்த அலங்கார உற்சவம் இம் மாதம் இருபத்தோராம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவங்களில் 29 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறு நாள் ஆடியமாவாசையன்று சமுத்திரத் தீர்த்தமும் இடம் பெறவுள்ளது. (க-2)

★ ★ ★

(சாவகச்சேரி)

வல்லை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த தேவி மகோற்சவம் நாளை 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இருவேளைகள் இடம்பெறும் இவ் உற்சவத்தின்போது அடுத்த மாதம் 02 ஆம் திகதி புதன் காலை இரதோற்சவமும் மறுநாள் காலை 6.00 மணியளவில் சமுத்திரஸ்நானமும் இடம்பெறும். (க-12)

...ராசா ...சன், பருத்தித்துறை
ராஜலிங்கம் தனரூபன், புலோலி தெற்கு
ஜி. கண்ணதாசன், அல்வாய் வடக்கு
தங்கராஜா ராஜஸ்ரீதரன், துன்னாலை வடக்கு
ரட்ணம் ராகுலன். அல்வாய் மேற்கு.

### ஆங்கிலம்

நாகதம்பி பத்மநாதன், நாகர் கோவில் மேற்கு
ஜெயறாஜினி கஸ்பர், செம்பியன்பற்று வடக்கு
தயாளதேவி குணரட்ணம், நாகர் கோவில் மேற்கு
சாம்பசிவம் அருள்செல்வி, வியாபாரி மூலை
உஷா தங்கராசா, புலோலி தெற்கு
தங்கராஜ ராஜஸ்ரீகந்தன், துன்னாலை வடக்கு
மாணிக்கம் சிவச்செல்வம், புலோலி
சிவாஜினி குமாரசுவாமி, புலோலி
செல்லத்துரை சசிதரன், புலோலி கிழக்கு
என். உமா சிவதர்சினி, புலோலி வடக்கு
சோமசுந்தரசர்மா குகதாசசர்மா, பருத்தித்துறை
ரட்ணஜோதி ஜானகி, பருத்தித்துறை
தயாளினி தெய்வேந்திரன், புலோலி தெற்கு
சண்முகரட்ணம் கிருபாலினி, புலோலி தெற்கு
பாலகிருஷ்ணன் தணிகைவேல், அல்வாய் மேற்கு
கவிதா கந்தசாமி, தும்பளை
திருநாவுக்கரசு பகீரதன், பருத்தித்துறை
பாலச்சந்திரன் ராஜ்குமார், பருத்தித்துறை
செல்லத்தம்பி சுரேந்திரா, அல்வாய்
சின்னராசா கௌசிகன், அல்வாய்
அமிர்தலிங்கம் பவானந்தி, துன்னாலை மத்தி
பத்மநாதன் பத்மகுமார், திருகோணமலை
சபாமணி கௌதமன், அல்வாய் தெற்கு
பாலேந்திரம் பிரசன்னா, வதிரி
கிருஷ்ணசாமி அனுஷியா, உடுப்பிட்டி
அனந்தராஜா பவானந்தன், அல்வாய் தெற்கு
அருளானந்தம் தயாளன், கரணவாய் தெற்கு
பாலகிருஷ்ணன் முகுந்தன், கரவெட்டி வடக்கு

### விவசாயம்

ஆறுமுகம் யோகராணி, தம்பசிட்டி
துரைசிங்கம் மயூரன், புலோலி தெற்கு
எஸ். நடராசா, புலோலி
அருந்தவராணி நல்லதம்பி, வல்வெட்டித்துறை
காங்கேசன் சிவறஞ்சன், கரவெட்டி
சின்னமணி ஸ்ரீதரன், கரணவாய் கிழக்கு
மட்டுவாள் தெற்கு
வெள்ளையன் சரவானந்தன், மட்டுவில் தெற்கு
ஜமுனா சந்திரசேகரன், மிருசுவில்

### கணிதம்

சின்னத்தம்பி ரமேஸ்வரன், பளை
நல்லதம்பி தாமோதரம்பிள்ளை, யசோதா, பளை
முருகேசு மனோகரி, இத்தாவில்
நடராஜ் தயாகரன், வவுனியா
தியாகராஜா ரதனி, எழுதுமட்டுவாள்
சின்னத்தம்பி மகேஸ்வரன் சாவகச்சேரி
ரி. சறோசா, மீசாலை மேற்கு
இராசையா பாஸ்கரன், சாவகச்சேரி
சுப்பிரமணியம் செல்வராணி சங்கத்தானை
அரியதாஸ் அஜிதா, மட்டுவில் தெற்கு
பொன்னையா விக்னேஸ்வரன், கைதடி தெற்கு
சின்னத்தம்பி லோகேஸ்வரி, மாசேரி
கந்தையா விஜயகாந்தன், மந்துவில் வடக்கு
ராமசாமி ஜெரிந்தா, மந்துவில் கிழக்கு

### விஞ்ஞானம்

சின்னத்தம்பி கமலரூபன், இயக்கச்சி
நல்லதம்பி தாமோதரம்பிள்ளை யசோதா, பளை
ரி. விக்னேஸ்வரன், தம்ப...
அருந்ததி கௌசல்யா சாவகச்சேரி,
சிவகங்கை பொன்னம்பலம் எழுதுமட்டுவாள்,
கந்தையா உமாதேவி மட்டுவில் வடக்கு,
பி. செந்தில்மதி
துசிதா தர்மலிங்கம் மட்டுவில் தெற்கு,
சுந்தரமூர்த்தி நிமலன் சங்கத்தானை,
கௌசலா இராஜசேகரம் சாவகச்சேரி,
நாகராஜா சுதந்திரன் சாவகச்சேரி,
ரட்ணலீலா வெற்றிவேல் சவாகச்சேரி,
சதாசிவமூர்த்தி குணாளினி சாவகச்சேரி,
நடராஜ உதயணன் (வரணி)
ஜனித்தா செல்வராஜா கொடிகாமம்,

### விவசாயம்

அன்னலிங்கம் ரவிச்சந்திரன் பளை,
முருகர் இராசலிங்கம் கொடிகாமம்,
முருகேசம்பிள்ளை சுவாமிநாதன் உசன்,
நவரட்ணராஜா நாவன்ஜன் கொடிகாமம்,
வேலாயுதம் சிவராஜா (வரணி)
வேலாயுதம் சிறீதா சாவகச்சேரி,

### உடற்கல்வி

ஸ்ரான்லி மேரி ஜஸ்மின் விஜி எழுதுமட்டுவாள்,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# மனிதர்கள் ஒருவிதம் பார்வைகள் பலவிதம்

ஒரு ஊரிலே அதிக செல்வந்தனாக ஒருவன் வாழ்ந்தான். அவனுடைய வாழ்விலே அனைத்துச் செல்வங்களும் மேலோங்கியிருந்தன ஆயினும் அவன் உடலில் இருந்த ஒரு வியாதிக்கு மட்டும் அவனால் விடைகாண முடியவில்லை.

அவனின் செல்வத்தினைப் பயன்படுத்தி பல வைத்தியர்களிடமும் அவன் தனது வியாதிக்கு சிகிச்சை செய்தான். ஆயினும் அவனுடைய வியாதியை தீர்க்கும் மருந்தாக எதுவுமே அமையவில்லை. என்ன சுகம் இருந்தும் அவனிடம் இருந்த வியாதியினால் இதயத்தில் ஓர் இனம்புரியாத சுமையிருந்தது.

அவன் அப்படிபலகாலமாக வருந்திக் கொண்டிருந்த போது அந்த ஊருக்கு ஓர் துறவிவந்தார். அவர்வந்துசில நாட்களிற்குள்ளே துறவியின் கைராசியின்புகழ் விரைவாக பரவியது.

அந்த கைராசி சிலவேளை தன்னுடைய வியாதியையும் தீர்க்கும் மருந்தாக அமையுமோ என்ற எண்ணத்தில் அந்தச் செல்வந்தனும்துறவியிடம் சென்றான்.

துறவி செல்வந்தனிடம்அவனது வியாதிபற்றி முழுமையாகக்கேட்டறிந்தார். சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டு 'மகனே' உன் வியாதி தீர வேண்டுமானால் உன் கண்களால் நீபார்க்கும் அனைத்துக் காட்சிகளும் பச்சை நிறமானவையாக இருத்தல் வேண்டும். இதன் மூலம் உன் வியாதி நீங்கி நீ நலம் 'பெறுவாய்' என்றுகூறினார்.

சில நாட்கள் கழிந்ததும் துறவி வேறு ஊரிற்குப் போய் விட்டார். செல்வந்தர் தனது வேலையாட்களை அழைத்து என்னைச்சுற்றியுள்ள அனைத்துப் பொருட்களிற்கும் பச்சை வர்ணம் பூசுங்கள் என்று கட்டளையிட்டார்.

அதன்பின்னர் அவனுடைய பார்வையில் பட்ட பொருட்களோ மனிதர்களோ பச்சை வர்ணம் பூசியனவாகவே காணப்பட்டனர். திரும்பும் இடமெல்லாம் அவனுக்கு பச்சைவர்ணமே காட்சியளித்தது: பல வருடங்கள் உருண்டோடின:

துறவி மீண்டும் அவ்வூருக்கு வந்தார். அந்தச் செல்வந்தனைச் சந்தித்து அவனுடைய வியாதி பற்றி அறிய அவன் வீட்டிற்குச்சென்றார். ஆனால் வழியில் அவரின் வேலையாட்கள் தடுத்து நிறுத்தி பச்சை வர்ணம் பூசினார்கள். இதன் காரணம் அறியாமலே துறவி செல்வந்தனிடம் சென்று ஏன் இப்படி நடக்கிறார்கள் என்று வினாவினார். அதற்கு செல்வந்தன் எல்லாம் நீங்கள் சில வருடங்களிற்கு முன்னால் கூறிய ஆலோசனைப் படியே நடைபெறுகின்றது.' என்றார்.

அப்போது துறவிக்கு மீண்டும் பழையது நினைவு வந்தது. அட முட்டாள் நீ உன் கண்களிற்கு பச்சை வர்ணக் கண்ணாடி ஒன்றினை அணிந்திருந்தால்உன்னைச்சுற்றியுள்ளவை அனைத்தும் பச்சையாகத் தெரிந்திருக்குமே நீ அதனை யோசியாமல் இப்படியான முட்டாள் வாழ்வா வாழ்கிறாய்?' என்று கூறி நகைத்து விட்டுச் சென்றார்.

இதற்கு இன்னும் ஓர் எடுத்துக் காட்டாக ஓர்அறையிலே நிறைந்த பொன் ஆபரணங்களும், ஒரு குழந்தையும் இருந்தது. கள்வன் உள்ளே போனான் கள்வன் பார்வையில் பொன் ஆபரணம் பதிந்தது. ஆனால் மழலைக் குழந்தை பார்வையில் வந்திருப்பவர் ஒரு மனிதன் அது போன்று தான்உலகம் பற்றிய ஒவ்வொருவருடைய பார்வையும் அவர்களிடையே உள்ள எண்ணத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது. நாம் அனைவரும் உருவத்தில் மனிதராயிருக்கின்ற போதிலும் எங்களின் இரு கண்கள் காட்டும் காட்சிகள் பல்வேறானவை. உள்ளத்தில் தூய்மையிருந்தால் கண்களின் காட்சியில் இனிமை இருக்கும். ஒருவனின் உள்ளத்தை காட்டும் கண்ணாடி கண்கள் கண்களை வைத்தே மனிதர்களின் மனப்பாங்குத் தன்மையை அறிய முடியும்.

(த)

தென்கச்சி சுவாமிநாதன்

## உள்ளி விலை வீழ்ச்சி

(துன்னாலை)

மிகவும் அதிகரித்து காணப்பட்ட உள்ளியின் விலை திடீர் வீழ்ச்சி கண்டுள்ளது.

200 ரூபா வரை விற்கப்பட்ட உள்ளி தற்போது 80 ரூபாவாக குறைவடைந்துள்ளது:

கொழும்பில் இருந்து, தனியார் வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களினால் பெருமளவு உள்ளி எடுத்து வரப் பட்டமையினாலேயே உள்ளியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. [உ-41]

## மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பரிஷ்பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள்நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

இச்சங்கத்திற்குரிய பங்கீட்டட்டை உடையோருக்கு 1லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 18.50 வீதம் 5 லீற்றர் விநியோகிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் பெறுவதற்காக ஏராளமானமக்கள் கொளுத்தும் வெய்யிலிலும் நீண்டவரிசையில் காத்துநின்றனர். (க-12)

## மீண்டும் வழமைபோல் இயங்குகிறது

(பண்டைதீவு)

வேலணை பிரதேச சபை ஆயுள்வேத வைத்தியசாலை மீண்டும் வழமை போல் இயங்குகிறது.

வைத்தியர் இடமாற்றம் காரணமாக, சிலகாலங்கள் வைத்தியசாலைப் பணிகள் இடம் பெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## தீவுப்பகுதியில் சனிக்கிழமையில் பாடசாலை

[மண்டைதீவு]

தீவுப்பகுதிப் பாடசாலைகள் தற்போது சனிக்கிழமைகளிலும் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் மேற்படி பகுதிப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்ததை நிவர்த்தி செய்யுமுகமாகவே

### வடமராட்சிப் பகுதியில்

## கிராமசேவையாளர்களுக்கு வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

[புலோலி]

வடமராட்சிப் பகுதியில் உள்ள ஒன்பது கிராமசேவை உத்தியோகத்தர்களினதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

இவ் ஒன்பது கிராமசேவை உத்தியோகத்தர்கள்பிரிவிலும் நிரந்தர கிராமசேவை உத்தியோகத்தர்கள் இல்லாமையால் பொது மக்கள் சிரமங்களையனுபவித்து வருவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான 5 வெற்றிடங்களும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 8 கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 2 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும், இவ் வெற்றிடங்களை நிரப்பி மக்களுக்கு உதவவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது: (க-52)

## வடபகுதி பஸ்பயணிகளுக்கு பொது முகாமையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் படையினரின் காவலரண்களில் சோதனை நடவடிக்கைக்கு பூரணமாக ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் தேவையற்ற வீண் அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என வட-பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்; மேற்படி சோதனை நடவடிக்கையின் போது பயணிகள் பஸ்ஸை விட்டு கீழே இறங்க மறுப்பதாலேயே தேவையற்ற வீண் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதனை தவிர்த்துக் கொள்ளும் வகையில் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 153395 ஏ | 153395 பி |
| 153446 ஏ | 153446 பி |
| 153462 ஏ | 153462 பி |
| 153462 சி | 153462 டி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 143855 ஏ | 143993 ஏ |
| 143993 பி | 146381 ஏ |
| 146462 ஏ | 146462 பி |
| 153310 ஏ | 153392 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 130781 ஏ | 135628 ஏ |
| 135628 பி | 143749 ஏ |
| 143759 ஏ | 143759 பி |
| 143854 ஏ | 143885 ஏ |
| 143885 பி | 143988 ஏ |
| 143988 பி | 144000 ஏ |
| 144000 பி | 144000 சி |

| | |
|---|---|
| 146257 ஏ | 146257 பி |
| 148978 ஏ | 148978 பி |
| 148978 சி | 149129 ஏ |
| 149130 ஏ | 149718 ஏ |
| 149718 பி | 149719 ஏ |
| 149720 ஏ | 149720 பி |
| 149720 சி | 149732 ஏ |
| 149732 பி | 153122 ஏ |
| 153129 ஏ | 153139 ஏ |
| 153139 பி | 153159 ஏ |
| 153159 பி | 153159 சி |
| 153159 டி | 153160 ஏ |
| 153160 பி | 153160 சி |
| 153166 ஏ | 153506 ஏ |
| 153507 ஏ | 153513 ஏ |
| 153513 பி | 153517 ஏ |
| 153517 பி | 153530 ஏ |
| 153530 பி | 153530 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 144763 ஏ | 144811 ஏ |
| 144813 ஏ | 144813 பி |
| 144816 ஏ | 145014 ஏ |
| 145015 ஏ | 145019 ஏ |
| 145117 ஏ | 145209 ஏ |
| 145211 ஏ | 145211 பி |
| 145230 ஏ | 145230 பி |
| 145405 ஏ | 145405 பி |

## தொண்டடிப்படையில் சேவையாற்ற

## தொண்டடிப்படையில் சேவையாற்ற பெரும்பாலானோர் பின்னடிக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் செம்பிறைச் சங்கமும் (Red Cresent movement) 1980 இல் 250 மில்லியனாக இருந்த தொண்டகளது எண்ணிக்கை தற்போது 105 மில்லியனாக குறைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

உலகில் ஏற்பட்டு வரும் பாரிய சமூக மாற்றங்களின் காரணமாக தொண்டர்களை நியமிப்பதில் பல பிரச்சினைகள் எதிர் நோக்குகின்றனர். பெரும் பாலானவர்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதனால் தொண்டடிப் படையில் சேவையாற்றப் பலருக்கு போதிய நேரம் இருப்பதில்லை அத்துடன் ஒவ்வொருவரும் தமது திறமைகளை மேலதிகமாக விருத்தி செய்வதில் ஈடுபடுவதும் இக் குறைபாட்டிற்கு காரணம் எனவும் தெரிவிக்கின்றனர். (க)

## நிவாரணம் வழங்கும் நாடுகளில் இலங்கைக்கு முதலிடம்

### - ஜனாதிபதி பெருமிதம்

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின்யுத்த தேவைகளுக்கு பெருந் தொகையான பணத்தைச் செலவிடுகின்ற போதிலும் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலேயே முழுமூச்சுடன் செயற்படுகின்றது என ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபவாஹினிக்கு ஜனாதிபதி அளித்தபேட்டி ஒன்றின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிக்கா தொடர்ந்து கூறுகையில்; உலகில் நிவாரணம்வழங்கும் நாடுகள்வரிசையில் இலங்கை முதன்மையானது என்றும், பொதுமக்களுக்கு ஆகக்கூடுதலான நிவாரணத்தை வழங்கி பணவீக்கத்தை 8 சத வீதமாகக் கட்டுப்படுத்தியதுடன் தேசிய பொருளாதார வளர்ச்சிவீதத்தை அரசு 5சத வீதமாக பேணுகின்றது என்றும் தெரிவித்துள்ளார். (ந-4)

தடைப்பட்டிருந்ததை நிவர்த்தி செய்யுமுகமாகவே சனிக்கிழமையிலும் வகுப்புகள் இடம்பெறுவதாக தெரியவருகிறது. (உ)

## மகா கும்பாபிஷேகம்

(அரியாலை)

மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகிறது. (உ-106)

## அலங்கார உற்சவம்

(மந்துவில்)

துன்னாலை ஸ்ரீ மித்திரன் அம்பன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று தொடக்கம் பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (உ39)

---

## ஆசிரியர்...

நடராஜா சித்திரா முல்லைபடி,

சங்கீதம்

துரைராஜா கீதாஞ்சலி பெரியபளை,
வரப்பிரகாசம் கொன்சிரா இத்தாவில்,
கி. ஹூர்த்கவி புலோப்பளை,
சண்முகசுந்தரம் சிவநந்தினி
யாகோப் மரிஸ்ரெஸ்லா எழுதுமட்டுவாள்,

| | |
|---|---|
| 143988 பி | 144000 ஏ |
| 144000 பி | 144000 சி |
| 144011 ஏ | 144011 பி |
| 144067 ஏ | 144144 ஏ |
| 144144 பி | 146407 ஏ |
| 146407 பி | 153204 ஏ |
| 153205 ஏ | 153240 ஏ |
| 153240 பி | 153294 ஏ |
| 153294 பி | 153387 ஏ |
| 153387 பி | 153387 சி |
| 153438 ஏ | |

| | |
|---|---|
| [illegible] | 145211 பி |
| 145230 ஏ | 145230 பி |
| 145405 ஏ | 145405 பி |
| 145513 ஏ | 144513 பி |
| 145513 சி | 145513 டி |
| 145542 ஏ | 145590 ஏ |
| 145597 ஏ | 145601 ஏ |
| 145619 ஏ | 145643 ஏ |
| 145723 ஏ | 141935 ஏ |
| 141935 பி | 141935 சி |
| 153274 ஏ | 153274 பி |
| 153430 ஏ | 153430 பி |
| 153444 ஏ | 153444 பி |

ஜூலை மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 143881 ஏ | 143881 பி |
| 143881 இ | 143881 டி |
| 143881 ஈ | 144206 ஏ |
| 144206 பி | 146357 ஏ |
| 146366 ஏ | 146487 ஏ |
| 146487 பி | 147157 ஏ |
| 147157 பி | 147304 ஏ |
| 153268 ஏ | 153378 ஏ |
| 153477 ஏ | 153477 பி |

### சாவகச்சேரி

153187 ஏ

### கரவெட்டி

145375 ஏ

### கோப்பாய்

| | |
|---|---|
| 143355 ஏ | 143355 பி |
| 143445 ஏ | 143445 பி |
| 143459 ஏ | 143459 பி |
| 145250 ஏ | 145250 பி |
| 146244 ஏ | 146247 [illegible] |
| 146248 ஏ | 146256 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 147100 ஏ | 147100 பி |
| 150308 ஏ | 150308 பி |
| 150309 ஏ | 153227 ஏ |
| 153320 ஏ | 153320 பி |
| 153348 ஏ | 153348 பி |
| 153408 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 141404 ஏ | 141404 பி |
| 144136 ஏ | 144136 பி |
| 146495 ஏ | 153323 ஏ |
| 153326 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 140986 ஏ | 145212 ஏ |
| 145222 ஏ | 145228 ஏ |
| 145228 பி | 143880 ஏ |
| 146499 ஏ | 146409 பி |
| 146409 சி | 146409 டி |
| 153273 ஏ | 153279 ஏ |
| 153371 ஏ | 153371 பி |
| 153397 ஏ | 153399 ஏ |
| 153399 பி | 153399 சி |
| 153425 ஏ | 153425 பி |
| 153453 ஏ | 153453 பி |
| 153453 சி | 153479 ஏ |
| 153479 பி | 153479 சி |

(நா-கு)

## உலக தரிசனம்

# ராணுவ முகாமருகில் குண்டுவெடிப்பு
# 9அதிகாரிகள் பலி; 27பேர் காயம்
## கடைகள் சிற்றுண்டிச் சாலைகள் சேதம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில், இராணுவ முகாம் ஒன்றின் அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் இராணுவ அதிகாரிகள் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

27 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 16 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமான வகையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இராணுவ முகாமிற்கு மிகவும் அருகே அமைந்திருக்கும் ஜின்னா சந்தையில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டே வெடித்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

தமது கடமைகளை முடித்துவிட்டு உணவருந்திக் கொண்டிருந்த இராணுவ வீரர்களை இலக்கு வைததே இக்குண்டு வைக்கப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும், குண்டை வெடிக்க வைத்தவர்கள் யார் என்பது தொடர்பான எது விதத்தகவல்களும் வெளியிடப்படவில்லை.

இக்குண்டு வெடிப்பினால் அப்பகுதிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் என்பன மிகவும் சேதமடைந்திருப்பதாகவும், பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(உ)

# கடத்தல் வழக்கு வாபஸ்
# ஐந்து ரஷ்யர்களும் விடுதலை
## இந்தியாவில் சம்பவம்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு ஆயுதங்களைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து ரஷ்யர்கள்மீது தொடரப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டதையடுத்து மேற்படி ஐவரும் இந்திய நீதிமன்றம் ஒன்றினால் விடுதலை செய்யப்பட்டார்கள்.

அந்த ஐந்து பேரும் ரஷ்யாவிற்கு அழைக்துச் செல்லப்படுகிறார்கள். இவர்கள் முன்பு மேற்கு வங்கபுரட்சிக் குழுவிற்காக பெருந்தொகையான ஆயுதங்களை விமானத்திலிருந்து போட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனர்.

பிரஸ்தாப நபர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்வதற்கு முன் 5 வருடங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த ஐவரினதும் விடுதலையை வரவேற்ற ரஷ்ய தலைவர் விளாடிமிர் புட்டின் ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே நல்ல புரிந்துணர்வு வளர்ந்துவருவதாகக் குறிப்பிட்டார். (து)

# கார்களைக் கடத்தும் கும்பல்மீது
# சிங்கப்பூர் பொலிஸார் பாய்ச்சல்

[சிங்கப்பூர்]

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து கார்களைத் திருடி அவற்றை இந்தோனேசியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளிற்கு ஏற்றுமதி செய்ததாகக் கருதப்படும் கொள்ளைக் கும்பல் ஒன்றை சிங்கப்பூர் புலனாய்வுத் துறையினர் மடக்கியுள்ளனர்.

இதுவரை 60 கார்களைக் கைப்பற்றியுள்ள பொலிஸார் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

மூன்று நாட்களுக்கு முன் 10 கார்களுடன் சிங்கப்பூரார் இருவர் நியூசிலாந்துக்குள் நுளைய முயன்றபோது கைதாயினர்.

அதனைத் தொடர்ந்து புலனாய்வுத் துறையினர் சோதனை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இன்னும் அதிகமானோர் கைது செய்யப்படலாமென்று சொல்லப்படுகிறது.

(து)

# இந்தியச் சனத்தொகையைக் கட்டுப்படுத்த
# பிரதமர் வாஜ்பாய் விரிவான ஏற்பாடு

(புதுடில்லி)

கட்டுக்கடங்காமல் பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இந்தியச் சனத்தொகை சென்ற மே மாதத்துடன் நூறுகோடியைத் தாண்டிவிட்ட நிலையில், அண்மையில் தேசிய மக்கள்தொகை ஆணையத்தின் முதலாவது கூட்டத்தை ஆரம்பித்துப்பேசுகையிலேயே பிரதமர் புதிய திட்டங்கள்தொடர்பாகத்தெரிவித்துள்ளார்.

இந்தவகையில், மக்கள் சனத்தொகை வலுவேகமாக பெருகிவருகின்ற பீஹார், உத்தரப்பிரதேசம் மத்தியபிரதேசம், ராஜஸ்தான், ஒரிஸா, ஆகிய மாநிலங்களில் சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் வகையில் மக்கள்தொகை கட்டுப்பாட்டுநிதியமும், பணிக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சனத்தொகையைக் கட்டுப்படுத்த சிறுவயது திருமணங்களைத் தடுத்து, ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது மாநில அரசுகளின் பொறுப்பு எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

(உ)

# மத்திய சட்ட அமைச்சர்
# நேற்று திடீர்இராஜினாமா

(புதுடில்லி)

இந்தியமத்திய சட்ட மற்றும் கம்பனி விவகாரத் துறை அமைச்சர் ராம்ஜெத்மெலானி மத்திய அமைச்சரவையில் இருந்து இராஜினாமாச்செய்துவிட்டார்.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கேட்டுக்கொண்டதற்கிணங்க குடியரசுத் தலைவர் இவருடைய இராஜினாமா கடிதத்தினை ஏற்றுக்கொண்டிருப்பதாய் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மும்பைக்கலவரம் குறித்து ஸ்ரீகிருஷ்ணா அறிக்கையினை அமுல்ப்படுத்த வேண்டும் என்ற பொதுநல வழக்கு குறித்து மத்தியஅரசாங்கம் இருவிதமாக பேசிவருவதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துக்கு எதிராக ராம்ஜெத்மெலானி கோரிவந்தார்.

இதனையடுத்து பிரதமர் சட்டஅமைச்சரை இராஜினாமா செய்யுமாறு கோரியதையடுத்து இவரது இராஜினாமா அமைந்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

(உ)

# பி. ஜே. பி. தலைமை பதவிக்கு
# தென்னிந்தியர் தெரிவாவார்

(புதுடில்லி)

பாரதியஜனதாக்கட்சியின் அகில இந்திய தலைவர் பதவிக்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவிருப்பதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக பாரதிய ஜனதாக் கட்சியினர் தீவிர ஆலோசனைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தியாவின் வடமாநிலங்களில் மிகவும் செல்வாக்குப் பெற்ற கட்சியாகத்திகழும் மேற்படி கட்சியினை தென் மாநிலங்களிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கு பெறவைக்கும்முயற்சியாகவே தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒருவரை தலைவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

தலைவராகத் தெரிவு செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டவர்களது பெயர் பட்டியலில் அகில இந்திய பாரதிய ஜனாதாக் கட்சியின் துணைத் தலைவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான ஜனா கிருஷ்ணமூர்த்தியின் பெயர் முன்னணியில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை 50 ஆண்டு கால பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினரும்பிரதமர்வாஜ்பாயின் முக்கிய அரசியல் ஆலோசகர்களில் ஒருவருமான ஜனா கிருஷ்ணமூர்திக்கே தலைவர் பதவி எட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## குழுமோதல்

அஸாமில்நேற்று முன்தினம் இடம்பெற்ற இனக்குழு மோதல்களில் இரு பழங்குடியினர் மற்றும் 4 தீவிரவாத தொடர்புடையோர் கொல்லப்பட்டனர். [உ]

# இந்தியாமீதான தாக்குதல் தொடரும்
# மௌலானாமசூது அஸார் எச்சரிக்கை

(இஸ்லாமபாத்)

இந்தியாமீதான தீவிரவாத நடவடிக்கைகள் தொடரும் என ஆயுதாரியான மௌலான மசூது அஸார் எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

கடந்தவருடம் இடம்பெற்ற இந்தியன் எயர்லைன் விமானக்கடத்தலின் போது கடத்தல்காரரின் கோரிக்... தங்கியுள்ள அஸார் கடந்த வெள்ளியன்று, கராச்சியில் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,

எல்லைக்கப்பாலான பயங்கரவாதத்தை பாகிஸ்தான்...

# பங்களா தேஷ் பிரதமர் மீதான

பெற்ற இந்தியன் எயர்லைன் விமானக்கடத்தலின் போது கடத்தல்காரரின் கோரிக்கைக்கிணங்க, இந்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த மௌலானா மசூது அஸாரை இந்தியஅரசு விடுவித்திருந்தது தெரிந்ததே.

தற்போது பாகிஸ்தானில் எல்லைக்கப்பாலான பயங்கரவாதத்தை பாகிஸ்தான் அரசு தூண்டிவிடுகிறது என இந்தியா குற்றம்சாட்டியதும் அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் மறுத்துவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# பங்களா தேஷ பிரதமா மீதான

# கொலை முயற்சி முறியடிப்பு

## கூட்டங்களும் இரத்து

(டாக்கா)

நேற்று முன்தினம் திட்டமிட்டிருந்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் அதீனாத மீதான் கொலைப் முயற்சி, இறுதி நேரத்தில் முறியடிக்கப்பட்டது.

பங்களாதேஷ் பிரதமர், தனது சொந்த ஊரில் பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொள்ள இருந்த சமயமே இச்சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

பிரபல கல்லூரி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படிக் கூட்டம் ஆரம்பமாவதற்கு சிலநிமிடங்கள் முன், மேடையின் அருகே நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்த பாரிய வெடிகுண்டொன்றினை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

சுமார் 76 கிலோக்கிராம் எடை கொண்ட மேற்படி குண்டுமேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரினால் எடுத்துச்செலப்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதமர் கலந்து கொள்விருந்த பொதுக்கூட்டம் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதுடன் மக்கள் அனைவரும் பாதுகாப்பான முறையில் வெளியேறும் வண்ணம் பொலிஸார் ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

பங்களாதேஷ் பிரதமரை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருந்த தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தலைநகர் டாக்காவில், நேற்று ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சி ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தபபட்டுள்ளதாகவும் தெரிவந்துள்ளது. (உ)

## காஞ்சி காமகோடி பீடாதிபதி

# பிரதமரின் பணிப்பின் பேரில் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஒத்திவைக்க முடிவு

(புதுடில்லி)

நாட்டில் பசுவதையை தடை செய்ய வேண்டும் என்று கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க உத்தேசித்திருந்த காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சுவாமிகள் உண்ணாவிரதத்தினை ஒத்திவைக்க முடிவு செய்துள்ளார்.

நேற்று உண்ணாவிரதம் இருப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதமரின் பணிப்பின் பேரிலேயே மேற்படி ஒத்திவைப்பு முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகதெரிய வருகிறது.

தனது முடிவு தற்காலிகமானது எனவும், குறிப்பிட்டபடி பசு வதையை ஒழிக்க அரசு உடனடி சட்டம் கொண்டு வராதவிடத்து சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது தவிர்க்க முடியாதது எனவும் சுவாமிகள் தெரிவித்துள்ளார். (உ)

# சொந்த இடங்களிற்கு திரும்பும் பொதுமக்கள்

(அன்னாலை)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்த மக்களில் சிலர் மீளவும் தமது இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

வரணி வடக்கு வாழைத் தோட்டம், மாசேரி குருக்கள் குடியிருப்பு, எருவன், கொடிகாமம், உசன் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களே பெருமளவு தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லுகின்றனர்.

மேற்கூறப்பட்ட இடங்களில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் போக்குவரத்து சேவைகள் இடம் பெறுகின்றது. இவ்இயல்பு நிலை காரணமாக மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களுக்கு செல்கின்றனர். (க-41)

# செஞ்சிலுவை பார்வையிட்டது

(வல்வெட்டித்துறை)

தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டி தெற்கு பாரதி சனசமூக நிலைய நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் அண்மையில் வந்து நேரடியாகப் பார்வையிட்டனர்.

மேற்படி நலன்புரிநிலையத்தில் தங்கியுள்ள 20 குடும்பங்களுக்கும் சமையல் பாத்திரங்களை அடுத்தவாரம் வழங்க செஞ்சிலுவை குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (க-16

ஈதல் இசை பட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு
குறள்

# வலம்புரி

## வணிகர் கழகத்தின்...

வணிகர்கள் நாட்டிற்கு வளம் சேர்ப்பவர்கள். மக்களுக்காக அவர்களும், அவர்களின் செல்வப் பெருக்கு மக்களாகவும் ஒன்றித்திருப்பதே மக்கள் இல்லாமல் அவர்கள் பொருளீட்ட முடியாது வணிகர்கள் முதலீடு எங்கிருந்து, எப்படி வந்தாலும் யாரை நம்பி முதலிடுகிறார்கள் என்றால் மக்களே என அடித்துக் கூறலாம். இதில் இரண்டுகருத்துக்கு இடமில்லை.

அண்மையில் நடந்த இடப் பெயர்வு தந்த வேதனை எழுத்தில் அடங்கா குறிப்பாக தென்மராட்சி மக்கள் புலம் பெயர்ந்து உயிர், உடமைகளைப் பறி கொடுத்து பரிதாப நிலையில் மரநிழலிலும் பாடசாலைகளிலும், ஒதுங்கி நிற்கிறார்கள்.

விவசாயிகள், அன்றாட உழைப்பாளிகள் என பல வகை மக்களும் வாழ்க்கையோடு போரடுகிறார்கள். 95 ல் வலிகாமத்து, யாழ்ப்பாணத்து மக்கள் புலம் பெயர்ந்தபோது அவர்களிடம் பெரும் பொருளீட்டியவர்கள் தான் தென்மராட்சிமக்கள். அதுஒரு புறம் இருக்க எங்கள் பங்களிப் புக்குரிய காலம் வந்த போது நாம் கை கொடுத்தாக வேண்டும்.

பெரும் பொருள் வணிகர்கள் கழகம் அமைத்துள்ளார்கள் இந்தக் கழகம் நினைத்தால் வட புலத்தையே பொருளால் ஆளலாம். வாடிய மக்களை உதவு கரம்கொடுத்துஆதரிக்கலாம்.

மணிக்கணக்கில் சுரம் போல் ஏறும் விலைகளின் விசித்திரம் பார்க்க அருவருப்பாக இருக்கும். மக்கள் படும் வேதனையில் இதுவும் ஒரு கேடா. அத்தியாவசிய உணவுப்பொருள் தம்மை மறைத்துக்கொள்வதும், தலை நீட்டும் போது நீண்ட விலையுயர்வில் நிற்பதும் வேடிக்கை தான். அவ் விலை ஏற்றம் கப்பல் கட்டணமல்ல பதுக்கல் கட்டணம்.

வணிகர்களின் பண்டங்கள் கப்பலில் அடிபட்டுப் போனால் கோடிக் கணக்கில் நட்டம் ஏற்படுந்தான். செட்டிநட்டம்ஊர் மேலே என்பது போல கிலோவுக்கு இரண்டுரூபா ஏற்றினால் சமாளித்துக் கொள்ளலாம் என்ற கருத்து மெல்ல வந்து காதிற்படுகிறது. அழக் கொண்டதெல்லாம் அழப் போம் என்பதை மறந்து போகக் கூடாது.

வணிகம் என்றால் பொருளீட்டல் தான். ஈட்டும் பொருளில் ஒரு பகுதி பசித்தோர் முகம் பார்க்கவும் உதவ வேண்டும். மக்களால் சேர்த்துயரும் பொருள் வளத்தில் ஒரு பகுதி இன்னலைத் துடைக்க உதவவேண்டும். வணிகர் கழகம் முன் வர வேண்டும். இதே மக்களிடமே வணிகர்கள் வளம் பெற பொருளீட்டப்போகிறார்கள். இவ்வுண்மையை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

ஏலவே இங்கு தூங்கிய மருந்துகள் சுரம் போல் விலையேறுவது எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?. ஏழை பசிக்களைக்கு வெறும் தேநீர் அருந்தலாமென்றால் மணிக்கணக்கில்விலைஏறி 38 ரூபாவில் நிற்கிறது. தேயிலையும் அப்படியே. இத்தகைய வள்ளன்மையற்ற வணிகம் நாட்டுக்கு வேண்டாம்.

-அன்புடன் ஆசிரியர்

# யாழ்ப்பாணம் பஸ் நிலையப்பகுதியில் பிச்சை எடுக்கும் சிறுவர் அதிகரிப்பு

## பொது அமைப்புகள் கவலை

(அரியாலை)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையப் பகுதியில் பிச்சை எடுக்கும் சிறுவர்களின் தொகை கடந்த சில காலங்களாக அதிகரித்துக் காணப்படுகிறது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வும் இதனால் பலர் தமது சொத்துக்கள் மற்றும் தொழில்களை இழந்தமையுமே இதற்குக் காரணமாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

அத்துடன் போர்ச் சூழலில் தம் பெற்றார்களை இழந்த சிறுவர்கள் பலரும் இவ்வாறான பிச்சையெடுக்கும் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இச் சிறுவர்கள் பிச்சையெடுப்பது மட்டுமன்றி சிறு சிறு களவுச் செயல்களிலும் ஈடுபட்டு வருவதனால் பலரினதும் தாக்குதல்களிற்கு ஆளாகி வருகின்றனர்.

யாரும் அற்ற அநாதைகளான இச்சிறுவர்களை இளைஞர் சிலர் வேண்டும் என்றே துன்புறுத்தியும் வருவதனை அவதானிக்கமுடிகின்றது.

இதேவேளை,

கொடிய போரின் காரணமாக பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டவர்களாயினும் அவர்களும் எமது தமிழ்ச் சமூகத்தின் அங்கத்தவர்களே என்பதையும் நாளைய நம் சந்ததியினரின் நலன் கருதியும் சமய, சமூக நிறுவனங்கள் பலவும் இவர்கள் மீது தம் கருணை நிறைந்த பார்வையைச் செலுத்த வேண்டிய அவசியம் குறித்தும் பல தரப்பில் இருந்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-106)

# நூல் அறிமுகம்

மு. விக்னேஸ்வரன்

## மாணவர்களின் அரிய பொக்கிஷம்

விஞ்ஞானத்தின் வரை விலக்கணம் அதன் வகைகள் அதன் வரலாறு நாகரிகங்களுடன் அது கொண்ட தொடர்பு அதன் வளர்ச்சி, விஞ்ஞானத்தையும் அதனை வளர்த்த பெரியார்கள். ஆகியவற்றின் மூலம் விஞ்ஞானத்தின் பரிமாணத்தைச் சுட்டிக் காட்டி மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆர்வலர்க்கும் தெளிவான விளக்கங்களைக் கொடுக்க வல்ல சிறந்ததோர் அறிவுப் பொக்கிஷமே ஆசிரியர் திரு. வே. யுகபாலசிங்கம் அவர்களின் விஞ்ஞானமும், விஞ்ஞான முறையும் ஓர் அறிமுகம் (AN introduction To Science & Scientic mnthod) என்ற நூலாகும்.

இந் நூலின் முகவுரையில் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் அவர்கள் கார்ல்மியர்சன் கூறிய விஞ்ஞானத்தின் ஆய்வு முறைதான் அதன் தனித்துவம் என்றும் விஞ்ஞானத்தின் உண்மைகளைக் கூறுவதிலும் பார்க்க அதன் முறையை மாணவன் புரிந்து கொள்ளத் தூண்டுவதே ஓர் ஆசிரியரின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். என்ற அந் நோக்கு இந் நூலில் உண்டு என்று உணர்ந்திருப்பதே இந் நூலின் சிறபபிற்கு மகுடமாக உள்ளது.

நூல்:
**விஞ்ஞானமும் விஞ்ஞானமுறையும் ஓர் அறிமுகம்**

ஆசிரியர்; வே. யுகபாலசிங்கம்

க. பொ. உயர்தரத்தில் அளவியலையும் பட்டப்படிப்பில் மெய்யியலையும் பாடமாகக் கற்கின்ற மாணவர்கட்கு இந் நூல் மெய்யியல் வரலாற்றின் தமிழ் நூல்களில் மைல் கல்லாக தலை நிமிர்ந்து நிற்கின்றது.

இந்நூலில் கிட்டத்தட்ட அறுபத்தேழு விஞ்ஞானிகள் நட்சத்திரங்களாகப் பிரகாசிக்கின்றார்கள் அவர்களின் கருத்துக்களும், சிந்தனையும் தளிர் விடுகின்றன ஆசிரியருடைய விடய சம்பந்தமான அறிவுத் தேடல்கள் அறிவுத் தேட்டங்கள் அரிய பொக்கிசங்களாகத் திகழ்கின்றன.

பாட சம்பந்தமாக மாணிவர்களிடையே காணப்படும் நெருக்கீடுகளை விடுவிக்கும் வெளிப்பாடாக முகிழ்ந்தெழுகின்றது.

பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா அவர்கள் தமது அணிந்துரையில் 'நீண்டகாலமாக அளவையியலும் விஞ்ஞான முறையும் போதிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர் பாடசாலை மட்டத்திலே இப்பாடப் பரப்பைப் போதிப்பதில் உயர் தகுதியைப் பெற்றிருக்கிறார்' என அடித்துக் கூறியதிலிருந்து இத் துறையில் ஆசிரியரின் பெறுமானத்தையும் இவரது நூல் உயர்தர மாணவர்கட்கு கலங்கரை விளக்காக அமையப் போகின்றது என்பதுவும் திண்ணம்.

# குடியிருந்தோரை அகற்றுவதற்கு வீட்டு வேலிக்கு தீயிட்ட நபர்

## கோப்பாய் மத்தியில் சம்பவம்

(கோப்பாய்)

வீட்டில் குடியிருந்தோரை வீட்டைவிட்டு துரத்துவதற்கு அவ்வீட்டுவேலிக்கு தீவைத்த சம்பவம் ஒன்று கோப்பாய் மத்தியில் சில தினங்களுக்கு முன் இடம்பெற்றது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது; சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் நீண்டகாலமாக கொழும்பில் வசிப்பதையடுத்து அவர்களின் உறவினர் குறிப்பிட்ட வீட்டில் வசித்துவந்தார்கள் அவர்களை அகற்றுவதற்கு வேறுவழிஒன்றும் இல்லாத வீட்டு உரிமையாளரின் உறவினர்ஒருவர் வீட்டுவேலிக்கு தீயிட்டாராம்.

இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள்பலர் பெரும் கவலை வெளியிட்டுள்ளனர். (க-39)

# வன்னிப் பகுதியில் அதிகரிக்கும் இரத்தச் சோகை நோய்

(வவுனியா)

வன்னிப் பகுதியில் இரத்தச்சோகை நோய் பெருமளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் மலேரியா நோயின் தாக்கம், மற்றும் போஷாக்கற்ற உணவுகள் போன்றவற்றின் தாக்கத்தாலேயே இந்நோய் வெகுவாக ஏற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# முருங்கைக்காய் பிடுங்கிய இளைஞன் மரத்தால் விழுந்துகாயம்

(புலோலி)

முருங்கைமரத்தில் முருங்கைக்காய் பிடுங்க ஏறிய இளைஞரொருவர் முருங்கை மரத்தால் விழுந்துபலத்த காயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

உடுப்பிட்டிவீதிதொண்டைமானாற்றைச் சேர்ந்த குணசிங்கம்விஜயகுமார்(வயது23) என்பவரேகாயமடைந்தவராவார். (க-52)

# நெல்லியடியில் புது வகையில் இடம்பெறும் சைக்கிள் திருட்டு

(மந்துவில்)

நெல்லியடியில் புதுவகை சைக்கிள் திருட்டுக்கள் இடம் பெறுவதாக பொதுமக்கள் பலர் புகார் தெரிவித்துள்ளனர்.

தூர இடங்களிற்கு கல்வி கற்க செல்லும் மாணவ மாணவிகள் தமது சைக்கிள்களை நகரில் உள்ள வீடுகள் மற்றும் வர்த்த நிலையங்களின் முன் பூட்டிவிட்டு செல்கின்றனர்.

இதனை அவதானித்த திருடர்கள் சைக்கிள்களை இலகுவாக திருடிச் செல்கின்றனர்;

இது குறித்து பொதுமக்கள் மத்தியில் பலத்த விசனம் தெரிவிக்கப்படுகிறது. (க-39)

# 'கெல்ற்' வகுப்பு நடைபெறுகிறது

[துன்னாலை]

வடமராட்சியில் இருந்து பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பல்கலைக் கழகம் செல்லவுள்ள மாணவர்களுக்கான ஆங்கில வகுப்பு [கெல்ற்] வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது; இதுபோன்றே தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியுள்ள பல்கலைக் கழக அனுமதி கிடைத்த மாணவர்களுக்கும் இப்பாடசாலையிலேயே ஆங்கில வகுப்பு நடைபெற்று வருகின்றது.

[41]

# கைகலப்பு

[யாழ்ப்பாணம்

நவாலி சென் பீற்றர் தேவாலயத்தை அண்டிய பகுதியில் நேற்று மாலை 6மணியளவில் இரு குழுவினருக்கிடையே கைகலப்புஇடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

பணக் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட வாய்த்தகராறே இக்கைகலப்பில் முடிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[வ]

# சேவைநலன் பாராட்டு விழா

யாழ் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் நீண்டகாலம் பணியாற்றிய சௌந்தரம் மயில்வாகனம் இன்று 24 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார்.

கல்விச் சமூகத்திற்கு இவர் ஆற்றிய அளப்பரிய சேவையைப்பாராட்டி பேற்படி பாடசாலை சமூகத்தினரால் சேவைநலன் பாராட்டு விழாவும் இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க)

## அநாதரவான சடலம்

சுன்னாகம் பகுதியில் இனம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று அநாதரவாக கிடக்கக் காணப்பட்டது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க இச்சடலம் உடுவில் மானிப்பாய் வீதி சுன்னாகம் ஆர்க்லேன் பிரதான வீதியை சந்திக்கும் இடத்தில் காணப்பட்டது,

சடலத்துடன் துவிச்சக்கர வண்டி ஒன்றும் காணப்பட்டது.

சாரம், சேர்ட் அணிந்த நிலையில் முகம் நிலத்தை நோக்கிய நிலையில் துவிச்சக்கர வண்டியின் மேல் சடலம் சரிந்த நிலையில் உள்ளது; வாய், மூக்கு என்பவற்றால் குருதி வடிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

அப்பகுதி கிராம உத்தியோகத்தர் நேரடியாக ஸ்தலத்திற்கு விஜயம் செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



விளையாட்டுச் செய்தி

17 வயதுக்குட்பட்டவர்களுக்கான

## ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்டில் இலங்கை அணி தகுதி பெற்றது

பதினேழு வயதுக்குட்பட்டவர்களுக்கான ஆசிய பிராந்திய கிரிக்கெட் வெற்றிக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இலங்கை அணி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பாகிஸ்தான கராச்சி நகரில் இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியின்போது இலங்கை அணி 43 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42 ஓவர்களில் 7விக்கற் இழப்பிற்கு 214 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 42 ஓவர்களில் சகல விக்கற்றுக்களையும் இழந்து 171 ஓட்டங்களை மட்டுமேபெற்றது. (4)

★ முதலாவது ரெஸ்ட் போட்டியில்

## தென்னாபிரிக்காவை இலங்கை ஒரு இனிங்ஸ்15 ஓட்டங்களால்வென்றது

காலி சர்வதேச விளையாட்டரங்கில், இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது ''ரெஸ்ட்'' போட்டியின் இறுதி நாளான நேற்று இலங்கை அணி ஒரு இனிங்ஸினாலும், 15 ஓட்டங்களினாலும் வெற்றியீட்டியுள்ளது.

இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் 522 ஓட்டங்களை பெற்றிருந்தது தென்னாபிரிக்க அணி முதலாவது இனிங்ஸில் 238 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால், இரண்டாவது இனிங்ஸையும் தொடர்ந்து ஆடி 8 விக்கற்றுக்களை இழந்து 112 ஓட்டங்களை பெற்றிருந்தது

தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸில் 269 ஓட்டங்களுக்கு சகல விக்கற்றுக்களையும் இழந்தது

முத்தையா முரளிதரன் இந்த ''ரெஸ்ட்'' போட்டியில் 171 ஓட்டங்களைக் கொடுத்து 13 விக்கற்றுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையின் ''ரெஸ்ட்'' வரலாற்றில் தென்னாபிரிக்க அணியை இலங்கை அணி முதற் தடவையாக தோற்கடித்துள்ளது. (வ-4)

## வன்னியில்மருந்துகளுக்குப்பெரும்தட்டுப்பாடு சர்வதேச அமைப்புகளுக்கு கடிதம்

(வவுனியா)

வன்னிமாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளில் போதிய மருந்துகள் இல்லாமையினால் மக்கள் பெருமளவு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக முல்லை மாவட்ட வெகுஜன ஒன்றியம் சர்வதேச தொண்டர் அமைப்புகளுக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளது. ஐ. சி. ஆர். சி, எம். எஸ். எவ். ஆகிய தொண்டர் நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் உரிய காலத்தில் மருந்துகள் அனுப்பிவைக்கப்படுவதில்லையெனவும், தடுப்பு மருந்துகள் சத்திரசிகிச்சைக்குரிய உபகரணங்கள், அம்புலன்ஸ் வண்டிகளுக்குரிய எரிபொருள் இன்மை தொடர்பாக அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

### வவுனியா...

ளப்பட்டிருந்தது:

வவுனியா முன்னாள் நகரசபையின் உபதலைவர் கே. சந்திரகுலசிங்கம் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்

### எதிர்வரும்---

காங்கிரஸைக் கேட்டுக் கொண்டதை அடுத்தே இரண்டாவது தடவை முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழு நேற்றுக் கூடியிருந்தது.

அமைச்சர் எம். எச். எம். அஸ்ரப் தலைமையில் நடைபெற்ற இச் செயற்குழுக் கூட்டத்தில்

# ஜேர்மனியில் புகலிடம் கோரிய தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை

(கொழும்பு

ஜேர்மனியில் புகலிடம் கோரி விண்ணப்பித்த இலங்கைத்தமிழ்அகதிகளைதிருப்பி அனுப்பவேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜேர்மனியின் வெளிநாட்டமைச்சரை நேரில் சென்று கோரவுள்ளனர்.

ஜேர்மனியில் புகலிடம் கோரியவர்களில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை திருப்பி அனுப்புவதற்கு ஜேர்மன் அரசு ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் கூட்டணியின் உபதலைவர் வி. ஆனந்தசங்கரியின் தலைமையில், இம்மாதம் 27ஆம் திகதி தூதுக்குழுவொன்று ஜேர்மன் செல்லவுள்ளது.

இத்தூதுக்குழுவில் மட்டக்களப்பு பாராளுமன்ற எம். பிக்களான பொன் செல்வராசா, இ, துரைராசசிங்கம், யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். கணேந்திரன் ஆகியோர்அங்கம்வகித்தனர்.

ஜேர்மனி செல்லும் கூட்டணித் தூதுக்குழுவினர் அந்த நாட்டின் வெளிநாட்டமைச்சர், மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து இலங்கையின்தற்போதைய சூழ்நிலை தொடர்பாக விளக்கிக் கூறுவதுடன், புகலிடம் கோரி விண்ணப்பித்து, நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும் கோரவுள்ளனர். [வ]

## ஆத்மசாந்தி பிரார்த்தனை

(வவுனியா)

1983 ஜூலை படுகொலையின்போது மரணத்தைத் தழுவிக்கொண்ட 53 போராளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை ஒன்று வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலில் புளொட் அமைப்பினால் நடத்தப்பட்டது.

இப்பிரார்த்தனைகளில் வவுனியா நகரசபையின் முன்னாள் உப தலைவர் க. சந்திரகுலசிங்கமும் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்துகொண்டனர். (வ)

### மக்களை...

பொதுமக்களைக் கைது செய்வதற்கோ விசாரணைக்குட்படுத்துவதற்கோ தமிழ்க் கட்சிகளுக்கு அதிகாரமில்லை என்றும் அதனைப் பொலிஸார் மேற்கொள்வார்கள் என்று எச்சரித்ததுடன் இவற்றில் ஈடுபடக் கூடாதென்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்காளரைக் கவரும்படியான் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட வேண்டும் என்றும்;

மின்சாரசபையின் மின்மாற்றிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில் ஒத்துழைப்பதுபோல் பஸ் எரிப்பு சம்பவங்களைத் தடுப்பதற்கும் பாதுகாப்பு வழங்க முன்வந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தமிழ்க் குழுக்களைக் கேட்டுக் கொண்டார்.

வவுனியாவில் அண்மையில் பஸ்கள் குண்டு வைத்து தகர்த்ததால் பன்னிரண்டு பாதைகளுக்கு பஸ் போக்குவரத்து இல்லை என்றும் இச்சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது. [வ]

## கொல்லங்கலட்டி இளம்பெண் வவுனியாவில் தற்கொலை

(வவுனியா)

திருமணமாகி 15 மாதங்களின் பின் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தெல்லிப்பழை கொல்லங்கட்டியைச் சேர்ந்த ரவீந்திரன் இன்பா (வயது 32) என்னும் இளம் பெண் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வவுனியாவில் இடம் பெற்றுள்ளது.

இத்தற்கொலைச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது;

தற்கொலை செய்து கொண்ட ரவீந்திரன் இன்பா தெல்லிப்பழை கொல்லங்கட்டியில் இருந்து இடம் பெயர்ந்து 1996 ஆம் ஆண்டு முதல் வவுனியா பட்டாணிச்சூர் பூவரசங்குளத்தில் வசித்து வந்ததாகவும் சம்பவதினம் கணவனும் மனைவியுமாக காலை 7.30 மணிக்கு குருமன்காடு காளி கோவிலுக்கு சென்று வழிபட்ட பின் வீடு வந்து சேர்ந்ததாகவும் அதன் பின் ரவீந்திரன் உணவுப் பொருட்கள் வாங்கச் சென்று வீடு திரும்பியபோது வீடு பூட்டிக் கிடந்ததாகவும் கதவை உடைத்துப் பார்த்த போது இன்பா கழுத்தில் நைலோன்கயிற்றினால் சுருக்கிட்டு தொங்கியதைக் கண்டதாக ரவீந்திரன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. இம்மரணம் தொடர்பானமரண விசாரணையை வவுனியா மரண விசாரணை அதிகாரி க. அமிர்தலிங்கம் மேற்கொண்ட பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (வ)

### நுண் அலை--

யாளர்கள் இணைப்புக்களைப்பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ரெலிகொம் நிறுவனம் விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

முன்னரிலும் பார்க்க மிகத் துல்லியமாகத் தொடர்பு கொண்டு பேசக் கூடியதாக இருக்கும்நுண் அலை தொலை

## தீவக ஆசிரியர்கள் தரம் உயர்த்தப்படுவர்

(மண்குபபான்)

தீவகசல்விவலயத்தைச்சேர்ந்தஆசிரியர்களைதரம்உயர்த்தும்நடவடிக்கைகளை தீவகக் கல்விவலயம் மேற்கொண்டு வருகிறது.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவில் இருந்து இவர்களுக்குரிய பதவி உயர்வுக்கடிதங்கள் மிகவிரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ந-2-83)

## இடம்பெயர்ந்தோர் தீவகத்தில்

[மண்கும்பான்]

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளோரில் சுமார் 140க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான நிவாரண பணிகளை அரச, அரச

### வவுனியா...

ளப்பட்டிருந்தது?

வவுனியா முன்னாள் நகர சபையின் உபதலைவர் கே. சந்திரகுலசிங்கம் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் சமரக்கோனுடன் தொடர்பு கொண்ட போது சண்முகம் கிருஷ்ணமூர்த்தி இன்று வவுனியா நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படுவார் என்றுகூறியதை அடுத்து இந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### கூட்டணி......

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழு நேற்றுக்காலை கூட்டணியின் உபதலைவர் வி.ஆனந்தசங்கரியின் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் செயலாளர் நாயகம் இரா சம்பந்தன் உட்பட மத்தியகுழு உறுப்பினர்கள் பலர் மாவட்ட ரீதியாகக் கலந்து கொண்டனர்.

முன்னர் குறிப்பிட்ட மூன்றுவிடயங்களில் இருந்தும் மாறக்கூடாது என்றும், விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும் மத்தியகுழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவைகூட்டணியினர் சந்தித்தபோது இதனை வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

கொண்டதை அடுத்தே இரண்டாவது தடவை முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழு நேற்றுக் கூடியிருந்தது.

அமைச்சர் எம். எச். எம். அஸ்ரப் தலைமையில் நடைபெற்ற இச் செயற்குழுக் கூட்டத்தில்,

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதென்றும் கொழும்பு, கண்டி, புத்தளம், களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அரசுடன் இணைந்து போட்டி இடுவதென்றும் தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரசின் இத்தகைய தீர்மானத்தினால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவுப், தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதென்ற தீர்மானத்தின் அடிப்படையில் அடுத்த மாதம் எட்டாம் திகதி மீண்டும் ஜனாதிபதியை முஸ்லிம் காங்கிரஸ் சந்திக்கவுள்ளது:

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் தனித்துப் போட்டியிடுவதென்ற தீர்மானத்தினால் கட்சியிலும் விரிசல்கள் ஏற்படலாம் எனவும் தனித்துப் போட்டியிடுவதாக இருந்தால் அரசில் இருந்து இராஜினாமாச் செய்யவேண்டுமென்ற கருத்தும் நிலவுவதாக கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன: (வ)

யில் பஸ்கள் குண்டு வைத்து தகர்த்ததால் பன்னிரண்டு பாதைகளுக்கு பஸ் போக்குவரத்து இல்லை என்றும் இச்சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது. [வ]

### பல்வேறு---

நாகர்கோயில், கொழும்புத்துறை, சரசாலை மற்றும் மணலாறுப்பகுதிகளில் இராணுவத்தினர் மேற் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையின்போது 20 விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகவும், மன்னார்ப்பகுதியில் புலிகளின் படகு ஒன்றைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்துள்ளது. (ந-4)

### பயிற்சி......

அனுமதிக்கப்பட்டுள்ளார்:

விமான நிலையத்தின் ஓடுபாதை சிறிது சேதத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒருவர் பயணிக்கக் கூடிய சீனத் தயாரிப்பான எவ்.7ரக விமானமே இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்து நெருங்கியது.

பயிற்சியை முடித்துவிட்டுத் திரும்பிய போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி யுத்தத்தை தீவிரப் படுத்தும் நோக்குடன் அரசு இஸ்ரேலிடம் இருந்து யுத்த விமானங்களை கொள்வனவு செய்து தீவிர பயிற்சியில்ஈடுபடுத்திவருவதும்இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

களைப்பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ரெலிகொம் நிறுவனம் விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

முன்னரிலும் பார்க்க மிகத் துல்லியமாகத் தொடர்பு கொண்டு பேசக் கூடியதாக இருக்கும்நுண்அலை தொலைபேசி இணைப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் சகலருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை மோட்டோறோலா தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு நாளை முதல் நுண்அலைத்தொடர்பு மூலமான தொலைபேசி இணைப்புக் கிடைக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### ரெலோ---

கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்திரகுமார், தயாபரன், சின்னராசா ஆகிய மூவரையும் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் திருமதி கே. சிவபாதசுந்தரம் உத்தரவிட்டுள்ளார். (வ)

### புலிகள்---

நாட்டுப்பற்றாளரான ✶ செல்லத்துரை பிரபாகரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். (2-4)

ளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளோரில் சுமார் 140க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் தங்கியுள்ளனர்; இவர்களுக்கான நிவாரண பணிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுவருகின்றன. [ந-2-83]

### சுற்றிவளைப்பு

[காரைநகர்]

காரைநகர் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் நேற்றுக் காலை 8.00மணிவரை கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு வீடுவீடாகச் சோதனை நடத்தப்பட்டது இத்தேடுதலின்போது எவரும் கைதாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (வ)

கஜன்
ஊர்காவற்றுறை
சரத்குமார் ஆனந்தபாபு கவுண்டமணி செந்தில் நடித்த
சேரன் பாண்டியன்
காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி/652)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு; யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.